முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1237

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.02.2023, வெள்ளிக்கிழமை

1. பிரணவக்குடில் படைத்த அரங்கனே
 பிரணவ சக்திமிகு தேசிகனே
 சரவணச் சுடரேற்றி உலகமெங்கும்
 சற்குருவாய் விளங்கும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
 அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
 (சுபகிருது வருடம் மாசி மாதம் 05 ம் நாள், 17.02.2023 வெள்ளிக்கிழமை)
 வரமென அரங்கன் உன் தொண்டர்கள் நிறைந்த பகுதியெல்லாம்
 வல்லமை கூடி இனிவருங்காலம்
3. காலமதில் ஞான சக்திபலமாகி
 கலியுகமே ஞானயுகமாக மாற்றம்பெறும்
 மாறுதலை தரும் மகாசக்திநீயப்பா
 மக்களைகாக்கும் மாதவசியும் நீயப்பா
4. ஆறுதலாய் உன் கரம்பட தீட்சைபெற்று
 அறிவிப்பேன் தர்மம் செய்யும் மக்களெல்லாம்
 மாறுதல் பெற்று இந்த கலியில்
 மாதவசிகளாக ஆக்கம் பெறுவர்
5. ஆறுமுகன் என் வழிபாடு செய்துகொண்டு உலகில்
 அரங்கன் உன் தர்மத்தை உயர்சேவையாக செய்யும் மக்களெல்லாம்
 வரம்பெற்று உன் சக்திவழி வையகத்தில்
 வாழும் காலமே ஞானிகளாவர்
6. ஆகவே அற்புதத்தை ஆறுமுகன் யானும் உன்வழி நடத்துகின்றேன்
 ஐயமின்றி உன்வழி சீடர்கள் அனைவரும் இணைந்துவர
 மெய்ஞானம்கூடி இனிபிறவா பேற்றை
 மேலான வரமாகக் கண்டு திளைப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–